ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2167/9 - 2020 මාර්තු මස 17 වැනි අඟහරුවාදා - 2020.03.17

*2167/9 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*கட்டளை இல. 61*

***2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்***

*20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கீழே தரப்பட்டுள்ள பொருட்களை அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக இறக்குமதியாளர், உற்பத்தியாளர், பொதி செய்பவர், வழங்குனர் அல்லது வியாபாரி எவரும் விற்பனை செய்யவோ, விற்பனைக்கு விடவோ, விற்பனைக்கு வெளிப்படுத்தவோ, அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென கட்டளையிடுகின்றது.*

| *பொருள்* | *ஆகக் கூடுதலான சில்லறை விலை (ரூபா)* |
|---|---|
| மைசூர் பருப்பு | *65.00/கி.கிராம்* |
| பெரிய வெங்காயம் (B. Onion) | *150.00/கி. கிராம்* |
| தகரத்திலடைக்கப்பட்ட மீன் | *100.00/நிகர எடை 425 கிராம் கொண்டது* |

*இக்கட்டளை, 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.*

*இந்தக் கட்டளையின் மூலம் 2017, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 2048/30 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 48 ஆம் இலக்கக் கட்டளையில் "மைசூர் பருப்பு", 2020, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதிய 2164/7 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 58 ஆம் இலக்க கட்டளையில் "பெரிய வெங்காயம்" மற்றும் 2017, யூலை மாதம் 14 ஆந் திகதிய 1975/68 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 39 ஆம் இலக்கக் கட்டளையில் "தகரத்திலடைக்கப்பட்ட மீன் (இறக்குமதி செய்யப்பட்டது)" எனும் வகைகள் நீக்கப்படுகின்றன.*

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

**மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க** (ஓய்வுபெற்ற),
தவிசாளர்.

கொழும்பு,
*2020, மாச்சு 17.*